மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒத்தி வைப்பு தீர்மானம் நடந்து முடிந்த பிறகு மற்ற விஷயங்களைப் பேசிக் கொள்ளலாம். கேள்வி நேரம் முடிந்த பிறகு ஒத்தி வைப்புத் தீர்மானம்தான். பிறகு இதை எடுத்துக் கொள்ளலாம்.

திரு. ஒ. சுப்பிரமணியன்: இது வேறு விஷயம்.........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதை முடிந்த பின்னால் எடுத்துக் கொள்ளலாம். தயவுசெய்து அமருங்கள்.

3. ஒத்தி வைப்புத் தீர்மானங்கள்.

(அ) கும்பகோணம் கல்லூரி ஆசிரியர்களும், ஆசிரியைகளும் கைது செய்யப்பெறுவதாக கூறப்பெறுவது குறித்து:

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: "கும்பகோணம் அரசினர் ஆடவர் கல்லூரி ஆசிரியர்கள், கும்பகோணம் அரசினர் பெண்கள் கல்லூரி ஆசிரியைகள் 22—2—79 அன்று ஐ.பி.சி. சட்டம் 143, 341, 188 ஆகிய பிரிவுகளின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். இதையொட்டி மாணவர்களும் வேலை நிறுத்தம் செய்வதில் ஈடுபட்டுள்ளனர். இதனால் பொது மக்களின் அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டுள்ளது. இப்பதட்ட நிலை குறித்து விவாதிக்க" பேரவையின் இதர அலுவல்கள் ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டு

1. திரு. செ. இராமலிங்கம்
2. திரு. கோ. இளங்கோவன்
3. திரு. கூ. ச. முருகேசன்

ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்று சுருக்கமாக விளக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன், திரு. செ. இராமலிங்கம்,

திரு. ரா. கிருஷ்ணன்: ஏற்கனவே இன்றைக்கு இது சம்பந்தமாக..........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தயவுசெய்து அமருங்கள், இது முடியட்டும்.

திரு. ரா. கிருஷ்ணன்: இதையும் சேர்த்து எடுத்துக் கொள்ளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சேர்த்து எடுக்க முடியாது.

1979 பிப்ரவரி 24]

* திரு. செ. இராமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, குடந்தை ஆடவர் கல்லூரி ஆசிரியர்களும், பெண்கள் கல்லூரி ஆசிரியைகளும் நேற்றைக்கு முதல் நாள் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள். அதே போன்ற நிலையிலும் ஆசிரியர்கள் சென்னையிலும் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப் பட்டிருக்கிறார்கள். ஆனால் குடந்தை ஆசிரிய, ஆசிரியைகள் விடுதலை செய்யப்படவில்லை, அவர்களில் 2 பேர் கர்ப்பிணிப் பெண்கள், 6 பேர் கைக் குழந்தைகளுடன் கைது செய்யப் பட்டுள்ளனர் — அவர்கள் விடுதலை செய்யப்படவில்லை. அவர்கள் மீது கிரிமினல் குற்றம் சாட்டப்பட்டு வழக்குகள் போடப்பட்டுள்ளன. அவர்கள் வேலூர் சிறைச் சாலையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள்.

புது கல்வி முறையினால் கல்லூரி ஆசிரியர்கள் எவருக்கும் வேலை இழப்பு *ஏற்படாது என்று இந்த அரசுஆணை பிறப் பிக்க வேண்டும். கல்வி அமைச்சரின் உறுதிமொழி ஆணை யாக பிறந்தால்தான் ஆசிரியர்களுக்கு நிம்மதி பிறக்கும். புரையோடிய பிறகுதான் புண்ணை கவனிப்போம் என்ற இந்த அரசின் அலட்சிய போக்கு மாற வேண்டும். அறிவை வளர்க்கும் ஆசிரிய சமுதாயத்தினரின் வாழ்வுப் பிரச்னையைக் கவனிக்க இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது. எனவே இதை உடனே முக்கிய கோரிக்கையாக ஏற்று இன் றைக்கே பரிகாரம் காண வேண்டும். அத்தோடு மட்டும் அல்லாது குடந்தை கல்லூரி மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்திருக் கிறார்கள். இவைகளுக்கெல்லாம் ஒரு முடிவு கட்டியாக வேண்டும். இது பற்றி விவாதிக்க இந்த அவையின் வேறு நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே அனைத்துக் கல்லூரிகள் சம்பந்தமாக நான் ஒரு தீர்மானம் கொடுத்திருக் கிறேன்........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எடுத்துக் கொண்ட தீர்மானத்திற்கு அமைச்சர் பதில் சொல்லட்டும். அதற்குப் பிறகு நீங்கள் பேசலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: நான் கொடுத்ததையும் சேர்த்து எடுத்துக் கொண்டால் மொத்தமாக பதில் சொல்லலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அப்படி சேர்த்து எடுத்துக் கொள்ளமுடியாது. 42-வது விதியின் கீழ் கொடுக்கப்பட்ட தீர்மானத்தில் ஒரு உறுப்பினர் கருத்தைச் சொன்ன பின்னர், அமைச்சர் பதில் சொல்வதுதான் முறை யாக இருக்கும். இந்த முறையை மாற்ற வேண்டாம்.

[1979 பிப்ரவரி 24

திரு. ஜே. ஜேம்ஸ்: எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. தனியாகக் கேட்பதற்கு பதிலாக நான் கேட்பதையும் சேர்த்து விட்டால் அமைச்சர் சேர்த்து பதில் சொல்லட்டும் என்று நினைத்தேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இன்றைக்கு இரண்டு வகையான ஒத்திவைப்புத் தீர்மானங்கள் இருக்கின்றன. ஒன்று கும்பகோணம் கல்லூரியை மட்டும் பொறுத்தது. மற்றொன்று பொதுவாக அனைத்துக் கல்லூரிகளில் உள்ள நிலைமையை குறித்தது. தாங்கள் ஒவ்வொன்றாக எடுத்துக் கொண்டால், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தனித்தனியாக பதில்கூற சௌகரியமாக இருக்கும்.

[முற்பகல் 10—30]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் தனித்தனியாக எடுத்துக்கொள்ள விரும்புகிறாரா, மொத்தமாக எடுத்துக்கொள்ள விரும்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: தனித்தனியாக எடுத்துக் கொள்கிறேன். கும்பகோணம் கல்லூரி பற்றி இப்போது சொல்லிவிடுகிறேன்.

இம்மாதம் 19-ம் தேதி முதல் கல்லூரி ஆசிரியர்கள் சில கோரிக்கைகளை வற்புறுத்தி போராட்டம் நடத்தி வருகிறார்கள். அரசு ஏற்கனவே அவர்களுடைய குறைகளைக் கவனித்து, குறைகளை அகற்றத் தேவையான நடவடிக்கை எடுக்கும் என்றும், எனவே ஆசிரியர்கள் இப்போராட்டத்தைக் கைவிட வேண்டும் என்றும் வேண்டியது. இருந்தும் 22-2-1979-ல் நடந்த போராட்டத்தில் மாநிலத்தில் பல பகுதிகளிலும் கல்லூரி ஆசிரியர்கள் அரசு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்னும், கோட்டாட்சியாளர் மற்றும் வட்டாட்சியாளர் அலுவலகம் முனனும் மறியல் செய்ததின் விளைவாக கைது செய்யப்பட்டார்கள்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள கும்பகோணத்தில் சுமார் 130 ஆசிரியர்களும், 69 ஆசிரியைகளும் கைது செய்யப்பட்டார்கள. சாதாரணமாக கைது செய்யப்பட்ட ஆசிரியர், ஆசிரியைகளும் மாலையில் விடுவிக்கப்படுகிறார்கள். கும்பகோணத்தில் 130 ஆசிரியர்களும், 66 ஆசிரியைகளும் விடுதலையை ஏற்க மறுத்து விட்டனர். அரசு ஆசிரியர்களின்பால் உள்ள மரியாதை காரணமாக கைது செய்த ஆசிரியர்களை மாலையில் விடுவித்துவருகிற

நடைமுறையைக் கடைப்பிடித்து வருகிறது. எனவே, இந் நிலைக்கு அரசு பொறுப்பல்ல என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். என்னுடைய இந்த விளக்கத்திற்குப் பிறகு அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்று கூறிக்கொள்கிறேன்.

(திரு. பெ. இராமலிங்கம் எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விதி 42-ன் கீழ் அமைச்சர் அறிக்கை அளித்த பின்பு கேள்விகள் கேட்கக் கூடாது, உட்காருங்கள். மாண்புமிகு கல்வி அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு, இந்தப் பிரச்னை குறித்து விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கத் தேவையில்லை என்பதால், இதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

(ஆ) கல்லூரி ஆசிரியர்களது போராட்டம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தமிழ்நாடு கல்லூரி ஆசிரியர்கள் வேலை நிறுத்தம், மறியல் செய்து கொண்டிருப்பதும், 23—2—1979 அன்று அமைச்சருடன் பேச்சு வார்த்தை மூலம் சுமுகமான முடிவு ஏற்படாமலும், ஆசிரியர்கள் போராட்டத்தை தொடர்ந்து நடத்துவது என்று முடிவு செய்து, போராடுவதாலும் பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டு திரு. ஆர். கிருஷ்ணன், திரு. ஆர். உமாநாத், திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கின்ற சொரணம், திரு. என். வரதராஜன், திரு. ஜே. ஜேம்ஸ் ஆகியோர் ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்று சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். திரு. ஆர். கிருஷ்ணன்.

திரு. கே. கந்தசாமி : பாயின்ட் ஆப் ஆர்டர் சார்...... துணைத் தலைவரவர்களே, நான் ஏற்கனவே முதன் முதலில் இது சம்பந்தமாக ரூல் 42-ன கீழ் நோட்டீஸ் கொடுத்து இருந்தேன். அதை 41-வது விதியின் கீழ் என்று மாற்றிவிட்டார்கள். இப்போது ரூல் 42-ன் கீழ் அனுமதிக்கிறீர்கள். நான் கொடுத்ததை மாத்திரம் மாற்றியது முறைதானா ?

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, நானும் இரண்டு நாட்களுக்கு முன்பு கொடுத்தேன்.